**ஆகஸ்ட் - 30**

# TNPSC துளிகள்

- டாக்டர் G. சதீஷ் ரெட்டிக்குப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் தலைவராக மேலும் 2 ஆண்டு கால பதவி நீட்டிப்பு வழங்கப் பட்டுள்ளது.
- தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஆல் ரவுண்டரான ஜேக்கஸ் காலீஸ், பாகிஸ்தானைச் சேர்ந்த ஜாஹீர் அப்பாஸ் மற்றும் புனேவில் பிறந்த ஆஸ்திரேலியாவின் முன்னாள் அணித் தலைவரான லிசா ஸ்தலேகர் ஆகியோர் சர்வதேசக் கிரிக்கெட் ஆணையத்தின் புகழ்மிக்க வாழ்த்தரங்கில் (ஹால் ஆப் பேம்) இணைக்கப் பட்டுள்ளனர்.
- ஆகஸ்ட் 24 ஆம் தேதியானது கவிஞர் நர்மத்தின் பிறந்த தினமாகும். இத்தினமானது குஜராத்தி மொழி மற்றும் அதன் இலக்கியத்திற்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தினமாக அனுசரிக்கப் படுகின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## முத்ரா கடன் திட்டத் தரவரிசை

- பெண்களுக்குக் கடன் வழங்குதலில் பிரதான் மந்திரி முத்ரா யோஜனாவின் தரவரிசைப் பட்டியலில் (PMMY - Pradhan Mantri Mudra Yojana) தமிழ்நாடு முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தத் தரவரிசையில் அதனையடுத்து மேற்கு வங்காளம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

***PMMY***

- PMMY ஆனது பெருநிறுவனம் அல்லாத சிறு மற்றும் நுண் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதற்காக வேண்டி 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ரூ.10 லட்சம் வரையில் கடன்கள் வழங்கப் படுகின்றன.
- இந்தக் கடன்கள் ஊரக வட்டார வங்கிகள், வணிக வங்கிகள், சிறு நிதியியல் வங்கிகள், வங்கிச் சேவை அல்லாத நிதியியல் நிறுவனங்கள், நுண் நிதியியல் நிறுவனங்கள் ஆகியவற்றினால் வழங்கப் படுகின்றன.

# தேசியச் செய்திகள்

## தேசியத் திருநர் ஆணையம்

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சகமானது தேசியத்

திருநர் ஆணையத்தை அமைத்துள்ளது.

- மத்திய சமூக நீதித் துறை அமைச்சர் இந்த ஆணையத்தின் தலைவராக செயல்படுவார். மேலும் பல்வேறு அமைச்சகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக இருப்பர்.
- அச்சமூகத்திலிருந்து இந்தக் குழுவில் நியமிக்கப் பட்டுள்ள 5 உறுப்பினர்கள் பின்வருமாறு : லட்சுமி நாராயண் திருப்பதி, கோபி சங்கர் (மதுரை), மீரா பரிடா, சைனாப் ஜாவித் பட்டேல் மற்றும் காக் சிங்டாபம் சியாம்சந்த் ஷர்மா ஆகியோராவர்.
- இந்த ஆணையமானது திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 என்ற சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ளது.

## NEP கொள்கையைச் செயல்படுத்தும் முதல் மாநிலம்

- 2020 ஆம் ஆண்டு புதிய தேசிய கல்விக் கொள்கையைச் செயல்படுத்த இருக்கும் முதல் மாநிலம் கர்நாடகா ஆகும்.
- புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள NEP (Natioanl Education Policy - தேசிய கல்விக் கொள்கை) கொள்கையை வரவேற்பதற்காக வேண்டி அந்த மாநில அரசினால் தேவையான நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- NEP - 2020 ஆனது அடுத்த 20 ஆண்டுகளுக்கு அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் அனைவருக்கும் சமமான ஒரு தரமான கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## ஐஎன்எஸ் விராட் குஜராத்தில் உடைக்கப் படுதல்

- 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியக் கடற்படையில் பணியாற்றிய ஐஎன்எஸ் விராத் என்ற கப்பலானது குஜராத்தில் உள்ள அலாங்கில் உடைக்கப்பட உள்ளது.
- இந்தக் கப்பலானது மூன்று வருடங்களுக்கு முன்பு பணியிலிருந்து நீக்கப்பட்டது.
- இது 1987 ஆம் ஆண்டில் இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டது.
- இதற்கு முன்பு 1959 முதல் 1984 வரை இந்தக் கப்பல் இங்கிலாந்துக் கடற்படையில் எச்எம்எஸ் ஹெர்மிஸ் என்ற பெயரில் பணியாற்றியது.
- இது விண்மீன் குழு என்ற பெயரிலான வகுப்பைச் சேர்ந்த ஒரு விமானம் தாங்கி வகைக் கப்பலாகும்.
- இது 2013 ஆம் ஆண்டில் பணியில் சேர்க்கப்பட்ட ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவிற்கு முன்பு இந்தியக் கடற்படையின் தலைமைக் கப்பலாக விளங்கியது.
- தற்பொழுது, இந்தியக் கடற்படையின் ஒரே விமானம் தாங்கிக் கப்பல் ஐஎன்எஸ்

விக்கிரமாதித்யாவாகும்.

# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் நீளமான நதி இழுவை வண்டி

- பிரம்மபுத்திரா நதியின் வடக்கு மற்றும் தெற்குக் கரைகளை இணைக்கக் கூடிய குவஹாத்தி பயணிகள் இழுவை வண்டித் திட்டமானது தொடங்கி வைக்கப் பட்டு உள்ளது.
- இந்த இழுவை வண்டிச் சேவையானது 1.8 கிலோ மீட்டர் நீளமுடையது ஆகும். இது இந்தியாவில் நதியின் மீது அமைந்த மிக நீளமான இழுவை வண்டித் தொலைவாகும்.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சுவச்சதா ஹை சேவா 2019 விருது

- நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகமானது (NLC - Neyveli Lignite Corporation) சுவச்சதா ஹை சேவா திட்டத்தின் செயல்பாடுகளில் தனது சிறப்பான பங்களிப்பை அளித்ததற்காக இந்த விருதை வென்றுள்ளது.
- இந்த விருதானது NLC நிறுவனத்தின் 3 அலகுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - நகர நிர்வாக அலுவலகம் - முதலாவது தரம்
  - முதலாவது வெப்ப ஆற்றல் நிலையம் : இரண்டாவது தரம்
  - சுரங்கத் துணை அலகுகள் - மூன்றாவது தரம்

## உலகின் அதிவேக மனித கால்குலேட்டர் பட்டம்

- நீலகந்த பானு பிரகாஷ் ஜோனல்லாகாடா (ஹைதராபாத்) என்பவர் மனநலக் கணக்கீடுகள் மீதான உலகக் கோப்பையில் இந்தியாவிற்கான முதலாவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இவர் உலகின் அதிவேக மனித கால்குலேட்டர் என்ற அடிப்படையில் 4 உலகச் சாதனைகள் மற்றும் 50 லிம்கா சாதனைகளை கையில் வைத்துள்ளார்.
- இந்தப் போட்டியில் லெபனான் நாட்டைச் சேர்ந்த முகமது எல் மிர் என்பவர் வெள்ளிப் பதக்கத்தையும் ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த அஸ்மிதா பால் என்பவர் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.
- இந்தியாவைச் சேர்ந்த ஆரியன் சுக்லா என்பவர் இதில் 4வது இடத்தைப் பிடித்து உள்ளார்.




# விளையாட்டுச் செய்திகள்

## 600 டெஸ்ட் விக்கெட்டுகளை எடுத்த முதலாவது வேகப் பந்து வீச்சாளர்

- பாகிஸ்தானுக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 600வது டெஸ்ட் விக்கெட்டினை எடுத்து சாதனை படைத்த முதலாவது வேகப் பந்து வீச்சாளர் இங்கிலாந்து அணியைச் சேர்ந்த ஜேம்ஸ் ஆண்டர்சன் ஆவார்.
- 600ற்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்திய குழுவான இலங்கையைச் சேர்ந்த முத்தையா முரளீதரன் (800), ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷேன் வார்ன் (708) மற்றும் இந்தியாவைச் சேர்ந்த அனில் கும்ப்ளே (619) ஆகிய 3 புகழ்பெற்ற சுழல் பந்து வீச்சாளர்களைக் கொண்ட குழுவில் இணைந்த நான்காவது வீரர் இவராவார்.




# முக்கிய தினங்கள்

## சிறு தொழிற்துறை தினம் - ஆகஸ்ட் 30

- சிறு தொழிற்துறைகளுக்கு ஆதரவளிப்பதற்காகவும் ஊக்கமளிப்பதற்காகவும் வேண்டி தற்பொழுதுள்ள சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்துறைகளுக்கு வேண்டிய சமமான வளர்ச்சியை அளிப்பதற்கான தனது முயற்சியின் ஒரு பகுதியாக ஒவ்வொரு ஆண்டும் தேசிய சிறு தொழிற்துறை தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் துறைக்காக ஒரு விரிவான கொள்கைத் தொகுப்பானது 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 அன்று அறிவிக்கப் பட்டது. இது இந்தியாவில் சிறு வணிக நிறுவனங்களுக்கு கணிசமான ஆதரவை அளிக்கின்றது.
- அப்பொழுதிலிருந்து அந்த அமைச்சகமானது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 30 ஆம் தேதியை சிறு தொழிற்துறை தினமாக அனுசரிக்க முடிவு செய்யப் பட்டது.




## ஆள்கடத்தலுக்கு உள்ளானவர்கள் மீதான சர்வதேச தினம் - ஆகஸ்ட் 30

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்தத் தினத்தை 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 21 அன்று அறிவித்தது.

- கடத்தல், தடுத்து நிறுத்தி வைத்தல், சிறை பிடித்தல் மற்றும் இதர காரணங்களினால் விருப்பமின்றி அல்லது கட்டாயமாக காணாமல் போனவர்கள் இந்தச் செயலுக்கு உள்ளாகியுள்ளனர்.
- இந்த ஆண்டானது ஆள்கடத்தலுக்கு உள்ளான அனைத்து நபர்களுக்கும் பாதுகாப்பு அளித்தல் என்பது தொடர்பான பிரகடனத்தின் 40வது ஆண்டு நினைவு தினத்தையும் ஆள்கடத்தலுக்கு உள்ளானவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தலுக்கான ஒப்பந்தத்தின் 10வது ஆண்டு நினைவு தினத்தையும் குறிக்கின்றது.




# இதரச் செய்திகள்

## உலக நீர் வாரம் 2020 : ஆகஸ்ட் 24 - 28




- 2020 ஆம் ஆண்டிற்கான உலக நீர் வாரமானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 முதல் 28 வரை இல்லங்களில் உலக நீர் வாரமாக (இல்லங்களில் உலக நீர் வாரம் - World Water Week at Home) அனுசரிக்கப் பட்டது.
- இது 1991 ஆம் ஆண்டு முதல் ஸ்டாக்ஹோம் சர்வதேச நீர்வளப் பயிற்சி மையத்தினால் ஒரு வருடாந்திர உலக நிகழ்வாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

- 2020 ஆம் ஆண்டிற்கான இல்லங்களில் உலக நீர் வாரத்தின் கருத்துரு, “நீர் மற்றும் காலநிலை மாற்றம் : செயல்திட்ட நடவடிக்கையைத் துரிதப்படுத்துதல்” என்பது ஆகும்.
- இது பூமியின் நீர்ப் பிரச்சினைகள் மற்றும் சர்வதேச வளர்ச்சி தொடர்பான பிரச்சினைகளைக் களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★